செ.வெ.எண்: 435 நாள்: 27.05.2010

# உலமா ஓய்வூதிய பயனாளிகள் தேர்வு

உலமா ஓய்வூதிய திட்டத்தின்படி பள்ளிவாசல்களில் பணிபுரியும் பேஷ் இமாம், மோதினார், மதரசாக்களில் பணிபுரியும் அரபி ஆசிரியர் மற்றும் தர்காக்களில் பணிபுரியும் முஜாவர் ஆகியோர் உலமாக்களாக கருதப்படுகின்றனர். இவர்களது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கு நிவாரணம் வழங்குமுகமாகவே அரசு இத்திட்டத்தைத் துவக்கியது. 60 வயது நிரம்பிய 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் போன்ற உலமாக்கள் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள்.

இத்திட்டத்தில் பிற்பட்டோர், மிக பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் 29.12.2009 நாளிட்ட அரசாணை எண்.116–ன்படி பயனாளிகளைத் தேர்வு செய்ய மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர் திரு.T.P.M.மைதீன்கான் அவர்கள் தலைமையில் உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழு திருத்தி அமைக்கப்பட்டது. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் தலைமையிலான முந்தைய ஒப்பளிப்புக்குழு 28.12.2006 அன்று கூடி 2006–2007–ஆம் ஆண்டிற்கு 257 பயனாளிகளுக்கும் இரண்டாவது கட்டமாக 20.07.2007 அன்று 2007–2008–ம் ஆண்டிற்கு 118 பயனாளிகளுக்கும் மூன்றாவது கட்டமாக 11.08.2008 அன்று 2008–2009–ம் ஆண்டிற்கு 213 பயனாளிகளுக்கும் நான்காவது கட்டமாக 14.09.2009–ல் 2009–2010–ம் ஆண்டிற்கு 61 நபர்களுக்கும் உலமா ஓய்வூதியம் அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு வக்ஃப் அமைச்சர் அவர்கள் தலைமையில் திருத்தியமைக்கப்பட்ட உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழுவின் முதல் கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடி 175 நபர்களுக்கு உலமா ஓய்வூதியம் அனுமதித்தது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 2400 உலமாக்கள் பயனடைந்து வருகிறார்கள். அரசு ஆண்டுதோறும் ரூ.2.16 கோடி ஒதுக்கீடு செய்கிறது. பயனாளிகளுக்கு மாதம் ரூ.750/– வீதம் அவர்கள் வாழ்நாள் வரையில் உலமா ஓய்வூதியம் வழங்கப்படும்.

**<u>இக்கூட்டத்தில் ஒப்பளிப்புக்குழு உறுப்பினர்கள்.</u>**

1. ஹாஜி.எம்.எச்.ஷம்சுத்தீன் ஆலிம். 2. மௌலவி கே.எம்.அஷ்ரஃப் அலி பாஸில் பாகவி.

ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரும் உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழு கூட்டுனர் மற்றும் உறுப்பினர் செயலருமாகிய திரு.அ.முகமது ஜமாலுதீன் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

//ஒம்//

**மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை**
**மற்றும் வக்ஃப் அமைச்சரின்**
**முதுநிலை நேர்முக உதவியாளர்.**

**வெளியீடு:** இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.